tnkalvi.online

No. of Printed Pages : **24**

7657

A

பதிவு எண்
Register Number

PART - III

கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours] [Maximum Marks : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note : (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

7657

1. இறுதிச் சரக்கிருப்பு என்பது ஓர் _____.

(அ) கற்பனைச் சொத்து (ஆ) நிலையான சொத்து

(இ) புலனாகாச் சொத்து (ஈ) நடப்புச் சொத்து

Closing stock is an item of _____.

(a) Fictitious Asset (b) Fixed Asset

(c) Intangible Asset (d) Current Asset

2. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது :

(அ) கணக்கியல் கால அனுமானம் (ஆ) வணிக தனித்தன்மை கருத்து

(இ) முன்னெச்சரிக்கை கொள்கை (ஈ) நிறுவனத் தொடர்ச்சி கருத்து

The concept which assumes that a business will last indefinitely is :

(a) Periodicity (b) Business Entity

(c) Conservatism (d) Going Concern

3. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றம் செய்வது _____ என அழைக்கப்படுகிறது.

(அ) குறிப்பேட்டில் பதிதல் (ஆ) கூட்டுதல்

(இ) இருப்புக் கட்டுதல் (ஈ) எடுத்தெழுதுதல்

The process of transferring the debit and credit items from Journal to Ledger accounts is called :

(a) Journalising (b) Casting

(c) Balancing (d) Posting

4. திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள் _____ -க்கு ஏற்றவை.

(அ) பெரிய, நடுத்தர வணிகம்

(ஆ) பெரிய, தனித்தன்மையான வணிகம்

(இ) சிறிய, பாரம்பரிய வணிகம்

(ஈ) மேலே கூறிய எதுவும் இல்லை

Customised accounting software is suitable for :

(a) Large, Medium Business

(b) Large, Typical Business

(c) Small Conventional Business

(d) None of the above

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

5. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும் ?

(அ) பெயரளவு கணக்குகள் மட்டும் (ஆ) ஆள்சார் கணக்குகள் மட்டும்

(இ) அனைத்து கணக்குகளும் (ஈ) சொத்துக் கணக்குகள் மட்டும்

The Trial Balance contains the balances of :

(a) Only Nominal accounts (b) Only Personal accounts

(c) All accounts (d) Only Real accounts

6. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாகப் பொருந்துகிறது ?

(அ) வாராக்கடன் - கடனீந்தோர்

(ஆ) தேய்மானம் - வியாபாரக் கணக்கு

(இ) இந்திய வருமான வரிச் சட்டம் - 1961

(ஈ) இறுதி சரக்கிருப்பு - இலாப நட்டக் கணக்கு

Which one of the following is correctly matched ?

(a) Bad debt - Creditor

(b) Depreciation - Trading Account

(c) Indian Income Tax Act - 1961

(d) Closing Stock - Profit and Loss Account

7. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, புலனாகாத சொத்துக்களின் அடக்க விலையை ஒதுக்கீடு செய்வது _____ என்று அழைக்கப்படுகிறது.

(அ) இலாப நட்டக் க/கு (ஆ) போக்கெழுதுதல்

(இ) தேய்மான ஒதுக்கு (ஈ) ஆண்டு இறுதியில் தேய்மானம்

The process of allocating the cost of an intangible asset over a period of time is called _____.

(a) Profit and Loss account (b) Amortisation

(c) Provision for depreciation (d) Annual depreciation

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

8. வாரா ஐயக்கடன் ஒதுக்கு கணக்கு ஏற்கனவே இல்லையெனில், உருவாக்கப்பட்ட ஐயக்கடன் ஒதுக்கு :

(அ) வாராக்கடன் கணக்கில் வரவு வைக்க வேண்டும்

(ஆ) வாராக்கடன் கணக்கில் பற்று வைக்க வேண்டும்

(இ) இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்க வேண்டும்

(ஈ) பற்பல கடனாளிகள் கணக்கில் பற்று வைக்க வேண்டும்

If there is no existing provision for doubtful debts, provision created for doubtful debts is _____.

(a) Credited to Bad debts account
(b) Debited to Bad debts account
(c) Debited to Profit and Loss account
(d) Debited to Sundry debtors account

9. வங்கி அறிக்கை என்பது :

(அ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்

(ஆ) ரொக்க ஏட்டின் ரொக்கப் பத்தியின் நகல்

(இ) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

(ஈ) ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியின் நகல்

A bank statement is a copy of :

(a) A customer's account in the Bank's book
(b) Cash column of the Cash book
(c) Cheques issued by the business
(d) Bank column of the Cash book

10. GAAP என்பது :

(அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்

(ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்

(இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்

(ஈ) இவற்றுள் ஏதுமில்லை

GAAPs are :

(a) Generally Accepted Accounting Principles
(b) Generally Accepted Accounting Provisions
(c) Generally Accepted Accounting Policies
(d) None of these

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

11. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது ?

(அ) பயன்பாடு (ஆ) வழக்கொழிவு

(இ) காலப்போக்கு (ஈ) (அ), (ஆ) மற்றும் (இ)

Depreciation is caused by :

(a) Usage (b) Obsolescence

(c) Lapse of time (d) (a), (b) and (c)

12. வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு _____ -இன் இயல்பினை உடையது.

(அ) ஆள்சார் கணக்கு

(ஆ) பெயரளவுக் கணக்கு

(இ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

(ஈ) சொத்துக் கணக்கு

Trading and Profit and Loss account is a _____ in nature.

(a) Personal account

(b) Nominal account

(c) Representative Personal account

(d) Real account

13. கணக்கியல் சமன்பாட்டின்படி சரியாக இல்லாதது :

(அ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல்

(ஆ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல்

(இ) முதல் = சொத்துக்கள் – பொறுப்புகள்

(ஈ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்

The incorrect accounting equation is :

(a) Liabilities = Assets + Capital

(b) Assets = Liabilities + Capital

(c) Capital = Assets – Liabilities

(d) Assets = Capital + Liabilities

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

14. இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது :

(அ) அனாமத்துக் கணக்கிற்கு (ஆ) முதல் கணக்கிற்கு

(இ) இலாப நட்டக் கணக்கிற்கு (ஈ) வியாபாரக் கணக்கிற்கு

The difference in Trial Balance is taken to :

(a) The Suspense account (b) The Capital account

(c) The Profit and Loss account (d) The Trading account

15. நிதித் தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார் ?

(அ) வாடிக்கையாளர் (ஆ) கடனீந்தோர்

(இ) அரசு (ஈ) பணியாளர்

Who is considered to be the internal user of the financial information ?

(a) Customer (b) Creditor

(c) Government (d) Employee

16. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுவது :

(அ) வணிகத்தின் கடனாளிகளால் (ஆ) வங்கியரால்

(இ) வணிகத்தின் கடனீந்தோரால் (ஈ) வணிகத்தால்

A Bank Reconciliation statement is prepared by :

(a) Debtors to the business (b) Bank

(c) Creditors to the business (d) Business

17. இருப்புநிலைக் குறிப்பு வணிகத்தின் _____ காண்பிக்கிறது.

(அ) விற்பனையை (ஆ) இலாபத்தினை

(இ) கொள்முதலை (ஈ) நிதி நிலையினை

Balance Sheet shows the _____ of the business.

(a) Sales (b) Profitability

(c) Purchases (d) Financial Position

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

18. தேய்மான விகிதமானது சமமாக இருக்கும்போது, நேர்க்கோடு முறைப்படி உள்ள தேய்மானத் தொகை மற்றும் குறைந்து செல் இருப்பு முறையுடன் ஒப்பிடும் போது :

(அ) முதலாண்டில் சமமாகவும், ஆனால் பின்வரும் ஆண்டுகளில் குறைவாகவும் இருக்கும்.

(ஆ) எல்லா ஆண்டுகளிலும் சமமாக இருக்கும்.

(இ) முதலாண்டில் குறைவாகவும், ஆனால் பின்வரும் ஆண்டுகளில் சமமாகவும் இருக்கும்.

(ஈ) முதலாண்டில் சமமாகவும், ஆனால் பின்வரும் ஆண்டுகளில் அதிகமாகவும் இருக்கும்.

If the rate of depreciation is same, then the amount of depreciation under Straight Line method vis-a-vis Written Down Value method will be :

(a) Equal in the first year but lower in subsequent years

(b) Equal in all years

(c) Lower in the first year but equal in subsequent years

(d) Equal in the first year but higher in subsequent years

19. விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்குப் பயன்படும் அடிப்படை ஆவணம் :

(அ) இடாப்பு (ஆ) பற்றுக் குறிப்பு

(இ) ரொக்க இரசீது (ஈ) வரவுக் குறிப்பு

The source document or voucher used for recording entries in Sales Book is :

(a) Invoice (b) Debit note

(c) Cash receipt (d) Credit note

20. சிறிய செலவினங்களைப் பதியும் ஏடு :

(அ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு

(ஆ) ரொக்க ஏடு

(இ) சில்லறை ரொக்க ஏடு

(ஈ) கொள்முதல் ஏடு

Small payments are recorded in a book called :

(a) Bills Payable book

(b) Cash book

(c) Petty Cash book

(d) Purchases book

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

Note : Answer **any seven** questions. Question No. **30** is **Compulsory**.

21. கணக்கியலை வரையறுக்கவும்.

Define Accounting.

22. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

Give the golden rules of Double Entry accounting system.

23. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை ?

What are the methods of preparation of Trial Balance ?

24. பயன் தீரும் சொத்துக்கள் என்றால் என்ன ?

What are wasting assets ?

25. மதியோட்டுக் குறிமுறை என்றால் என்ன ?

What are mnemonic codes ?

26. கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்குகளின் இருப்புகளைக் கண்டறிந்து, அவை இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவு பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக.

(i) பற்பல கடனீந்தோர்

(ii) அறைகலன்

(iii) தள்ளுபடி அளித்தது

(iv) வங்கி மேல்வரைப்பற்று

State whether the balance of each of the following accounts should be placed in the debit or the credit column of the Trial Balance.

(i) Sundry Creditors

(ii) Furniture

(iii) Discount Allowed

(iv) Bank Overdraft

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

27. இருப்பாய்வு தயாரிக்கும் முன் கீழ்க்கண்ட பிழைகள் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்தவும்.

(i) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹ 500 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(ii) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹ 600 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

(iii) விற்பனைத் திருப்ப ஏட்டில் ₹ 700 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(iv) விற்பனைத் திருப்ப ஏட்டில் ₹ 800 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

The following errors were detected before preparation of Trial Balance. Rectify them.

(i) Purchases returns book is undercast by ₹ 500.

(ii) Purchase returns book is overcast by ₹ 600.

(iii) Sales returns book is undercast by ₹ 700.

(iv) Sales returns book is overcast by ₹ 800.

28. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து சரக்கு விற்பனைக்கான அடக்கத்தினைக் கணக்கிடவும்.

விவரம்	தொகை ₹	விவரம்	தொகை ₹
தொடக்கச் சரக்கிருப்பு	10,000	மறைமுகச் செலவுகள்	5,000
கொள்முதல்	80,000	இறுதி சரக்கிருப்பு	15,000
நேரடிச் செலவுகள்	7,000		

Compute the cost of goods sold from the following information.

Particulars	₹	Particulars	₹
Opening Stock	10,000	Indirect Expenses	5,000
Purchases	80,000	Closing Stock	15,000
Direct Expenses	7,000		

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

29. மாற்றுச்சீட்டு செலுத்தற்குரிய நாளைக் கணக்கிடுக.

மாற்றுச்சீட்டு நாள்	தவணைக் காலம்	சலுகை நாட்கள்	செலுத்தற்குரிய நாள்
ஜூலை 12	1 மாதம்	3	?
அக்டோபர் 1	30 நாட்கள்	3	?

Calculate the Due date for bill.

Date of Bill	Period of Bill	Days of grace	Due date
12th July	1 Month	3	?
1st October	30 days	3	?

30. ஆண்டுத் தொகை காரணியை கணக்கிட பயன்படுத்தும் சூத்திரம் யாது ?
Which formula is used to compute Annuity Factor ?

பகுதி - III / PART - III

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

Note : Answer **any seven** questions. Question No. **40** is **Compulsory**.

31. கணக்கேடுகள் பராமரிப்பிற்கும், கணக்கியலுக்கும் இடையேயான வேறுபாடுகள் யாவை ? (எவையேனும் 3)
State the differences between book-keeping and accounting (any 3).

32. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்துக் கணக்கு மற்றும் பெயரளவுக் கணக்கு என்று வகைப்படுத்துக.

(அ) வங்கி (ஆ) கொள்முதல்

(இ) கவிதா (ஈ) விற்பனை

(உ) தள்ளுபடிப் பெற்றது (ஊ) கொடுபட வேண்டிய கூலி

Classify the following into Personal, Real, Nominal accounts.

(a) Bank (b) Purchases

(c) Kavitha (d) Sales

(e) Commission Received (f) Outstanding wages

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

33. பேரேட்டுக் கணக்கின் இருப்பு கட்டுதலின் வழிமுறைகள் எவையேனும் மூன்றினை விளக்குக.

Explain any three procedures for balancing a ledger account.

34. கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவு தந்து, பேரேட்டுக் கணக்கில் எடுத்து எழுதவும்.

ராம் என்பவர் மே 20, 2018 அன்று சம்பளம் கொடுத்தது ₹ 15,000, மின் கட்டணம் செலுத்தியது ₹ 8,000 மற்றும் கூலி கொடுத்தது ₹ 2,000.

Journalise the following transactions and post them to ledger.

On May 20, 2018, Ram paid Salaries ₹ 15,000, Electricity charges ₹ 8,000 and Wages ₹ 2,000.

35. பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

விவரம்	தொகை ₹	விவரம்	தொகை ₹
வங்கிக்கடன்	1,00,000	கொள்முதல்	90,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	50,000	விற்பனை	1,50,000
சரக்கிருப்பு	35,000	கடனாளிகள்	2,00,000
முதல்	1,25,000	வங்கி	1,00,000

Prepare the Trial Balance from the following information.

Name of the account	₹	Name of the account	₹
Bank Loan	1,00,000	Purchases	90,000
Bills Payable	50,000	Sales	1,50,000
Stock	35,000	Debtors	2,00,000
Capital	1,25,000	Bank	1,00,000

36. தேய்மானம் நீக்க வேண்டியதன் நோக்கங்கள் யாவை ?

What are the objectives of providing Depreciation ?

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

37. பின்வரும் நடவடிக்கைகளை குணால் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

2017		₹
ஜனவரி 1	கை இருப்பு ரொக்கம்	11,200
5	இரமேஷ் என்பவரிடமிருந்து பெற்றது	300
7	வாடகை செலுத்தியது	30
8	ரொக்கத்திற்கு சரக்குகளை விற்றது	300
10	மோகனுக்கு செலுத்தியது	700
27	அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது	200
31	சம்பளம் கொடுத்தது	100

Enter the following transactions in a simple cash book of Kunal.

2017		₹
Jan. 1	Cash in Hand	11,200
5	Received from Ramesh	300
7	Paid Rent	30
8	Sold goods for cash	300
10	Paid Mohan	700
27	Purchased furniture for cash	200
31	Paid Salaries	100

38. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு சைமன் நிறுவனத்தின் 2018 மார்ச் 31 -ம் நாளுக்குரிய வங்கிச் சரிக்கட்டும் பட்டியலை தயாரிக்கவும்.

(i) வங்கி அறிக்கையின்படி பற்றிருப்பு ₹ 2,500

(ii) செலுத்திய காசோலை இன்னும் வசூலித்து வரவு வைக்கப்படவில்லை ₹ 10,000

(iii) இணைய வங்கி மூலம் செலுத்திய தொகை ₹ 2,000 ரொக்க ஏட்டில் பதியப்பட-வில்லை

From the following particulars of Simon Traders, prepare a Bank Reconciliation statement as on 31st March, 2018.

(i) Debit balance as per Bank statement ₹ 2,500.

(ii) Cheques deposited amounting to ₹ 10,000 not yet credited by bank.

(iii) Payment through net banking for ₹ 2,000 omitted in the Cash book.

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

39. பின்வரும் நடவடிக்கைகளை எழுதுபொருள் வியாபாரம் செய்யும் இராம் நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிவு செய்க.

2017

ஜனவரி 1 அன்பு & கோ கடனுக்கு விற்றது ரீம் ஒன்று ₹ 150 வீதம் 20 ரீம்கள் வெள்ளைத்தாள்.

ஜனவரி 2 ஜெகதீஷ் நிறுவனத்திற்கு ஒரு டஜன் ₹ 360 வீதம் 6 டஜன்கள் எழுதுகோல் கடனுக்கு விற்றது.

ஜனவரி 10 பழைய செய்தித்தாளை ரொக்கத்திற்கு விற்றது ₹ 620.

ஜனவரி 15 இளங்கோ & கோவிற்கு கடனுக்கு விற்றது ஒன்று ₹ 170 வீதம் 10 ஓவிய அட்டைகள்.

ஜனவரி 20 கனி விற்பனையகத்திற்கு ஒன்று ₹ 1,520 வீதம் 4 எழுது மேசைகளை ரொக்கத்திற்கு விற்றது.

From the following transactions write up the Sales Day Book of M/s. Ram and Co., a Stationery Merchant.

2017

Jan. 1 Sold to Anbu & Co., on credit 20 reams of white paper @ ₹ 150 per ream.

Jan. 2 Sold to Jagadish Sons on credit 6 dozen pens @ ₹ 360 per dozen.

Jan. 10 Sold old newspapers for cash @ ₹ 620.

Jan. 15 Sold on Credit to M/s. Elango & Co., 10 drawing boards @ ₹ 170 per piece.

Jan. 20 Sold to Kani & Co., 4 writing tables at ₹ 1,520 per table for cash.

40. வாராக்கடன் என்றால் என்ன ? அதற்கான சரிக்கட்டுப் பதிவுகள் தருக.

What is Bad debts ? Give the Adjusting Entry for it.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

7657

பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

Note : Answer **all** the questions.

41. (அ) வாகன உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் சசிகுமாரின் ஏடுகளில் பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டு பதிவு தருக.

2017			₹
அக்டோபர்	1	வியாபாரம் தொடங்குவதற்காக இட்ட சரக்கின் மதிப்பு	40,000
	3	வணிகத்தில் இட்ட ரொக்கத்தின் மதிப்பு	60,000
	4	அருளிடமிருந்து கடனுக்கு வாங்கிய சரக்கின் மதிப்பு	70,000
	6	அருளிற்கு திருப்பிய சரக்கின் மதிப்பு	10,000
	10	அருளின் கணக்கில் செலுத்திய தொகை	60,000
	15	சந்தருக்கு கடனுக்கு விற்ற சரக்கின் மதிப்பு	30,000
	18	சந்தர் திருப்பி அனுப்பிய சரக்கின் மதிப்பு	6,000
	20	சந்தரிடமிருந்து ரொக்கம் ₹ 23,000 பெற்றுக் கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது	
	25	மின்னணு பரிவர்த்தனை மூலம் சம்பளம் வழங்கியது	2,000
	30	சசிகுமார் தமது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்துக் கொண்ட சரக்கின் மதிப்பு	10,000

அல்லது

(ஆ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.

(i) முருகன் ₹ 80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்

(ii) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 30,000

(iii) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹ 5,000

(iv) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு, பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ₹ 5,000

(v) கூடுதல் முதல் இட்டது ₹ 10,000

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(a) Pass Journal entries in the books of Sasikumar who is dealing in automobiles.

2017			₹
Oct.	1	Commenced business with goods	40,000
	3	Cash introduced in the business	60,000
	4	Purchased goods from Arul on Credit	70,000
	6	Returned goods to Arul	10,000
	10	Paid cash to Arul's account	60,000
	15	Sold goods to Chandar on credit	30,000
	18	Chandar returned goods worth	6,000
	20	Received cash from Chandar in full settlement	23,000
	25	Paid Salaries through ECS	2,000
	30	Sasikumar took for personal use goods worth	10,000

OR

(b) Prepare accounting equation for the following transactions.

(i) Murugan commenced business with cash ₹ 80,000

(ii) Purchased goods for cash ₹ 30,000

(iii) Paid Salaries by cash ₹ 5,000

(iv) Bought goods from Kumar for ₹ 5,000 and deposited the money in CDM

(v) Introduced additional capital of ₹ 10,000

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

7657

42. (அ) நாகராஜன் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட 2016, மார்ச் 31 -ஆம் நாளைய இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

விவரம்	₹	விவரம்	₹
கொள்முதல்	10,000	விற்பனை	15,100
கூலி	600	பெற்ற கழிவு	1,900
உள் ஏற்றிச்செல் செலவு	750	வாடகை பெற்றது	600
விளம்பரம்	500	கடனீந்தோர்	2,400
வெளித் தூக்குக் கூலி	400	முதல்	5,000
ரொக்கம்	1,200		
இயந்திரம்	8,000		
கடனாளிகள்	2,250		
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	300		
சரக்கிருப்பு (1-1-2016)	1,000		
	25,000		25,000

2016, மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

சரிகட்டுதல்கள் :

(i) முன் கூட்டிப் பெற்ற கழிவு ₹ 400

(ii) முன் கூட்டிச் செலுத்திய விளம்பரம் ₹ 150

(iii) கொடுபட வேண்டிய கூலி ₹ 200

(iv) 31.03.2016 அன்று இறுதிச் சரக்கிருப்பு ₹ 2,100

அல்லது

(ஆ) கீழ்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.

(i) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ₹ 10,000

(ii) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ₹ 5,000

(iii) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ₹ 2,000

(iv) பழைய இயந்திரம் வாங்கி பழுது பார்த்தச் செலவு ₹ 3,000

(v) ஆலை வாடகைச் செலுத்தியது ₹ 12,000

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(a) Given below are the balances extracted from the books of Nagarajan as on 31st March, 2016.

Particulars	₹	Particulars	₹
Purchases	10,000	Sales	15,100
Wages	600	Commission received	1,900
Freight inwards	750	Rent received	600
Advertisement	500	Creditors	2,400
Carriage outwards	400	Capital	5,000
Cash	1,200		
Machinery	8,000		
Debtors	2,250		
Bills Receivable	300		
Stock 1st Jan. 2016	1,000		
	25,000		25,000

Prepare the Trading and Profit and Loss account for the year ended 31st March, 2016 and the Balance sheet as on that date after adjusting the following :

(i) Commission received in advance ₹ 400
(ii) Advertisement paid in advance ₹ 150
(iii) Wages outstanding ₹ 200
(iv) Closing stock as on 31.03.2016, ₹ 2,100

OR

(b) Classify the following items into Capital or Revenue.

(i) Audit fees paid ₹ 10,000
(ii) Labour welfare expenses ₹ 5,000
(iii) ₹ 2,000 paid for servicing the company vehicle
(iv) Repair to Machinery purchased in second hand ₹ 3,000
(v) Rent paid for the factory ₹ 12,000

43. (அ) இராம்கோ ஆடை நிறுவனம் ஏப்ரல் 1, 2014 அன்று ₹ 2,00,000 மதிப்புள்ள ஓர் இயந்திரத்தை நிலா நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது. அதற்கு நிறுவுகைச் செலவாக ₹ 10,000 செலவழித்தது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கப்பட்டது. முதல் மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கினை தயாரிக்கவும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 -ல் முடிக்கப் பெறுகின்றன.

அல்லது

(ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(a) M/s. Ramco Textile Mills purchased Machinery on 1st April 2014 for ₹ 2,00,000 on credit from M/s. Nila & Co. and spent ₹ 10,000 on its installation. Depreciation is provided at 10% per annum on the written down value method. Prepare Machinery account and Depreciation account for the first three years. Books are closed on 31st March every year.

OR

(b) Mention any five limitations of computerised accounting system.

44. (அ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதவும்.

2017

ஜூன் 1 ராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹ 50,000

6 ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹ 8,000

8 தேவி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 9,000

15 ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது ₹ 4,000

20 சாந்தி என்பவரிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 5,000.

அல்லது

(ஆ) பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரித்த பின் கண்டறியப்பட்டன. அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதி பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

(i) அருணுக்கு ₹ 152 -க்கு கடனுக்கு சரக்கு விற்றது அருணின் கணக்கில் ₹ 125 என எழுதப்பட்டுள்ளது.

(ii) லட்சுமியிடம் கடனுக்கு ₹ 550 -க்கு சரக்கு கொள்முதல் செய்தது, அவரது கணக்கில் ₹ 505 என வரவு வைக்கப்பட்டுள்ளது.

(iii) அபிரூபாவிடமிருந்து கடனுக்கு ₹ 404 -க்கு அறைகலன் வாங்கியது, அறைகலன் கணக்கில் ₹ 440 என பற்று வைக்கப்பட்டது.

(iv) ₹ 200 ரொக்கத்திற்கு இயந்திரம் வாங்கியது, பேரேட்டில் இயந்திரக் கணக்கில் எடுத்து எழுதப்படவில்லை.

(v) கொள்முதல் ஏட்டின் கூட்டுத்தொகை ₹ 89 முன் எடுத்து எழுதும் போது ₹ 98 என எழுதப்பட்டுள்ளது.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(a) Show the direct Ledger postings for the following transactions.

2017

June 1 Raja commenced business with cash ₹ 50,000

6 Sold goods for cash ₹ 8,000

8 Sold goods to Devi on credit ₹ 9,000

15 Goods purchased for Cash ₹ 4,000

20 Goods purchased from Shanthi on credit ₹ 5,000

OR

(b) The following errors were located after the preparation of the Trial Balance. Assume that there exists a Suspense account. Rectify them.

(i) Sale of goods on credit to Arun for ₹ 152 posted to his account as ₹ 125.

(ii) Bought goods from Lakshmi on credit for ₹ 550, credited to her account as ₹ 505.

(iii) Purchase of furniture from Abirupa for ₹ 404 on credit was debited to Furniture account as ₹ 440.

(iv) Purchased machinery for cash ₹ 200 was not posted to Machinery account.

(v) The total of Purchases book ₹ 89 was carried forward as ₹ 98.

45. (அ) பின்வரும் விபரங்களைக் கொண்டு நாலந்தா புத்தகக் கடையின் துணை ஏடுகளைத் தயார் செய்யவும்.

2017

டிசம்பர் 1 உமாதேவியிடமிருந்து கடனுக்கு வாங்கியது
ஒன்று ₹ 80 வீதம் 100 வணிகப் புள்ளியியல் புத்தகங்கள்
ஒன்று ₹ 150 வீதம் 100 கணக்குப்பதிவியல் புத்தகங்கள்

டிசம்பர் 7 ஸ்ரீ தேவி & கோ -விற்கு கடனுக்கு விற்றது
ஒன்று ₹ 90 வீதம் 240 வணிகப் புள்ளியியல் புத்தகங்கள்
ஒன்று ₹ 170 வீதம் 250 கணக்குப்பதிவியல் புத்தகங்கள்

டிசம்பர் 10 சுபா & கோ -விடமிருந்து வாங்கியது
ஒன்று ₹ 80 வீதம் 40 பொருளாதாரப் புத்தகங்கள்
கழிக்க : வியாபாரத் தள்ளுபடி 15%

டிசம்பர் 15 சேதமடைந்திருந்த 10 கணக்குப்பதிவியல் புத்தகங்கள் உமாதேவியிடம் திருப்பப்பட்டது. இதற்கு பணம் பெறப்படவில்லை.

டிசம்பர் 18 குப்தா பிரதர்ஸிற்கு கடனுக்கு விற்றது
ஒன்று ₹ 95 வீதம் 200 பொருளாதாரப் புத்தகங்கள்

டிசம்பர் 26 சுபா & கோ-விற்கு 6 பொருளாதாரப் புத்தகங்கள் திருப்பி அனுப்பப்பட்டன.

அல்லது

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(ஆ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு துரைராஜ் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

2017		₹
மார்ச் 1	ரொக்க இருப்பு	12,000
	வங்கி இருப்பு	15,000
2	ரொக்கம் வங்கியில் செலுத்தியது	11,000
3	சரக்கு விற்றது ₹ 18,500. பாதி ரொக்கமாகவும், பாதி காசோலையாகவும் பெறப்பட்டு, அக்காசோலை உடனடியாக வங்கியில் செலுத்தப்பட்டது.	
4	ஜெயராஜ் என்பவருக்கு கடனுக்கு விற்றது	7,000
8	ஜெயராஜ் காசோலை அனுப்பி தனது கணக்கு முழுவதையும் தீர்த்துக் கொண்டது	6,900
12	ஜெயராஜிடமிருந்து பெற்ற காசோலை வங்கியில் செலுத்தப்பட்டது	
14	இக்பால் என்பவரிடமிருந்து சரக்குகள் வாங்கி அவருக்கு உடனடியாக காசோலை விடுக்கப்பட்டது	8,500
15	முரளி என்பவரிடமிருந்து சரக்குகள் கடனுக்கு வாங்கப்பட்டது	4,000
19	கண்ணப்பனிடமிருந்து ₹ 1,975 -க்கான காசோலையைப் பெற்றுக்கொண்டு ₹ 2,000 - க்கான கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது	
20	சொந்த செலவுகளுக்காக ரொக்கம் எடுத்தது ₹ 3,000, காசோலை மூலம் எடுத்தது 5,000	
25	வினோத்திற்கு ₹ 1,850 -க்கு காசோலை விடுத்து தீர்த்துக்கொண்ட கணக்கு	2,000

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(a) From the following information prepare the necessary subsidiary books for Nalanda Book stores.

2017

Dec. 1 Bought from M/s. Umadevi on credit
100 copies of Business Statistics Books @ ₹ 80 each.
100 copies of Accountancy Books @ ₹ 150 each.

Dec. 7 Sold to Sridevi & Co., on credit
240 copies of Business Statistics books @ ₹ 90 each.
250 copies of Accountancy books @ ₹ 170 each.

Dec. 10 Bought from Subha & Co.,
40 copies of Economics books @ ₹ 80 each.
Less : 15% Trade Discount

Dec. 15 Returned to M/s. Umadevi 10 copies of damaged Accountancy books for which cash is not received

Dec. 18 Sold to Gupta Bros., on credit
200 copies of Economics books @ ₹ 95 each.

Dec. 26 Returned 6 copies of Economics books to Subha & Co.,

OR

(b) From the following transactions prepare three column cash book of Thiru Durairaj.

2017		₹
March 1	Cash in hand	12,000
	Cash at Bank	15,000
2	Cash paid into bank	11,000
3	Goods sold ₹ 18,500. Half of it is received in cash and half of it is received by cheque which is immediately deposited in the bank.	
4	Sold on credit to Jayaraj for	7,000
8	Jayaraj sent a cheque in full settlement	6,900
12	Jayaraj's cheque was sent to bank	
14	Bought goods from Iqbal and issued a cheque to him immediately	8,500
15	Bought goods from Murali on Credit	4,000
19	Received a cheque from Kannappan in full settlement of his account of ₹ 2,000	1,975
20	Drew cash ₹ 3,000 and by cheque ₹ 5,000 for personal use	
25	Paid to Vinod by cheque in full settlement of his account of ₹ 2,000	1,850

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

46. (அ) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன்பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

2017			₹
ஜூலை	1	காசாளரிடமிருந்து முன்பணம் பெற்றது	2,000
	7	மடல் ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது	100
	8	வெள்ளைத்தாள்கள் வாங்கியது	50
	10	ஆட்டோ ரிக்ஷா கட்டணம் கொடுத்தது	200
	15	கூலி கொடுத்தது	300
	18	தபால் செலவுகள் செய்தது	100
	21	எழுதுபொருள்கள் வாங்கியது	450
	23	தேநீர் செலவுகள் செய்தது	60
	25	துரித அஞ்சல் செலவு செய்தது	150
	27	சிற்றுண்டி செலவுகள் செய்தது	250
	31	ஏற்றிச்செல் செலவுகள் செய்தது	150

அல்லது

(ஆ) 2017, டிசம்பர் 31 -ஆம் நாளன்று, கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டும் பதிவுகள் தருக.

(i) கொடுபட வேண்டிய சம்பளம் ₹ 1,200
(ii) கொடுபட வேண்டிய வாடகை ₹ 300
(iii) முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ₹ 450
(iv) முதலீடுகள் மீதான கூடியுள்ள வட்டி ₹ 400
(v) போக்கெழுத வேண்டிய வாராக் கடன் ₹ 200

(a) Prepare analytical petty cash book from the following particulars under imprest system.

2017			₹
July	1	Received advance from cashier	2,000
	7	Paid for writing pads and registers	100
	8	Purchased white papers	50
	10	Paid auto charges	200
	15	Paid wages	300
	18	Postal charges	100
	21	Purchased Stationery	450
	23	Tea expenses	60
	25	Paid for speed post	150
	27	Refreshment expenses	250
	31	Paid for carriage	150

OR

(b) Show necessary entries to adjust the following on 31st December, 2017.

(i) Outstanding salaries ₹ 1,200
(ii) Outstanding rent ₹ 300
(iii) Prepaid insurance premium ₹ 450
(iv) Interest on investment accrued ₹ 400
(v) Bad debts written off ₹ 200

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

47. (அ) ரவிச்சந்திரன் என்பவரது ஏடுகளிலிருந்து 31-12-2016 அன்று எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

விவரம்	₹	விவரம்	₹
முதல்	1,50,000	விற்பனை	75,000
கடனாளிகள்	22,800	விற்பனைத் திருப்பம்	1,000
பெற்ற வாடகை	500	அளித்த தள்ளுபடி	800
வங்கி மேல்வரைப்பற்று	3,100	பெற்றத் தள்ளுபடி	1,000
கடனீந்தோர்	5,500	கூலி	2,900
வளாகம்	1,46,000	சம்பளம்	3,500
தொடக்க சரக்கிருப்பு	10,000	கழிவு கொடுத்தது	1,100
கொள்முதல்	45,000	பொதுச் செலவுகள்	2,000

அல்லது

(ஆ) 2018, மார்ச் 31 -ஆம் நாளுக்குரிய வங்கிச் சரிக்கட்டும் பட்டியலைத் தயார் செய்து ரொக்க ஏட்டின்படியான இருப்பினைக் கண்டறிக.

	விவரம்	₹
(i)	வங்கி அறிக்கையின்படியான வங்கி இருப்பு	15,000
(ii)	விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது	2,500
(iii)	வங்கிக் கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை	250
(iv)	வங்கியால் பற்று செய்யப்பட்ட வட்டி ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை	500
(v)	நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை	300
(vi)	செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது	900

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(a) The following balances are extracted from the books of Ravichandran on 31st December, 2016. Prepare the Trial Balance.

Particulars	₹	Particulars	₹
Capital	1,50,000	Sales	75,000
Debtors	22,800	Return inwards	1,000
Rent Received	500	Discount Allowed	800
Bank Overdraft	3,100	Discount Received	1,000
Creditors	5,500	Wages	2,900
Premises	1,46,000	Salaries	3,500
Opening Stock	10,000	Commission Paid	1,100
Purchases	45,000	General expenses	2,000

OR

(b) Prepare bank Reconciliation statement from the following data and find out the balance as per Cash book as on 31st March, 2018.

Particulars	₹
(i) Bank balance as per bank statement	15,000
(ii) Cheques issued but not yet presented for payment	2,500
(iii) Bank charges not recorded in the cash book	250
(iv) Interest charged by bank not recorded in the cash book	500
(v) Bank paid insurance premium as per standing instruction but not recorded in the cash book	300
(vi) Cheques deposited but not yet credited	900

- o 0 o -

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share